ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2292/02 - 2022 අගෝස්තු මස 08 වැනි සඳුදා - 2022.08.08

2292/02 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 08 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: 4/1/கா/சு/91.

காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின் இல.: 4-3/7/2016/எச்டபிள்யூ/476.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், மல்லவபிடிய பிரதேச செயலாளர் பிரிவில், இல. 718, கோவான கிராம அலுவலர் பிரிவில், கோவான கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட கடத்திரல் வரைபட இலக்கம் 420207 மற்றும் 2020.06.25 ஆந் திகதியில் தொகுதி இல. 2, தாள் இல. 10 இன் துண்டு இல. 256 (1 துண்டு) விஸ்தீரணம் 0.0106 ஹெக்டயார் எனக் காட்டப்பட்டுள்ள கீழே குறிப்பிடப்பட்ட காணித் துண்டின் விபரம்:

1. துண்டு இல. 256

காணியின் பெயர்: கோன்கொல்லவத்த; விபரம்: வீட்டுத் தோட்டம்; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தின் 38 (அ) பிரிவின் கீழ் எடுக்கப்பட்டுள்ளது. ஆரம்ப உரிமை கோருபவர் ஜயகொடி ஆரச்சிலாகே அப்புஹாமிலாகே சின்தா பிரியாங்கனி, காணி எடுத்தல் பணிகளை நிறைவு செய்வதற்காக; விஸ்தீரணம்: 0.0106 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரிமை கோருகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 28 ஆந் திகதி

மு.ப. 10.00 மணிக்கு மல்லவபிடிய பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 14 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

என். ஏ. ஏ. எஸ். பிரியங்கர,
பிரதேச செயலாளர்,
மல்லவபிடிய.

பிரதேச செயலகம்,
மல்லவபிடிய,
2022, யூன் 17.

EOG 08 - 0033